//மிக மிக அவசரம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க..எண்.1480/அ3/2021 நாள்: 25 .10.2022

---

பொருள் : தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி – அரசு மற்றும் நகராட்சி உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் நிரப்புதல் 01.01.2022 தேதியில் உள்ளவாறு தகுதி வாய்ந்த இடைநிலை, உடற்கல்வி மற்றும் சிறப்பாசிரியர்கள் – முன்னுரிமை பட்டியல் வெளியிடுதல் – தொடர்பாக.

பார்வை : தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின்(பணியாளர் தொகுதி)செயல்முறைகள் ந.க.எண்.30277/சி3/இ2/2022 நாள்.21.10.2022

---

01.01.2022 தேதியில் உள்ளவாறு பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு(தமிழ் ஆங்கிலம்,கணிதம்,அறிவியல் மற்றும் சமூக அறிவியல்) தகுதி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் / உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களின் முன்னுரிமைப் பட்டியல் பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின்(பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறை கடிதத்துடன் வெளியிடப்பட்டுள்ளது, அனுப்பிவைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள அனைத்து ஆசிரியர்களின் பார்வைக்கு உட்படுத்தி அவர்களின் ஒப்புதல் பெற்று கோப்பில் வைக்குமாறும் மேலும் முன்னுரிமை குறித்து முறையீடு ஏதேனும் இருப்பின் சார்ந்த ஆசிரியரின் எழுத்து பூர்வமான விண்ணப்பத்தினை உரிய ஆதாரங்களுடன் பெற்று 27.10.2022 அன்று காலை 11.00 மணிக்குள் இவ்வலுவலகம் அனுப்பி வைக்குமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் முன்னுரிமைப்பட்டியலில் கையொப்பமிட ஏதுவாக சார்ந்த ஆசிரியர்களை வேலூர் முதன்மைக் கல்வி அலுவலத்தில் நேரில் அனுப்பிவைக்குமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இப்பணி மிகமிக அவசரம் என்பதால் இதில் எவ்வித சுணக்கமுமின்றி துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. 27.10.2022 க்கு பிறகு பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் எவரேனும் மேற்கண்ட விவர சுற்றறிக்கை பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்படவில்லை என தெரிவித்தால் அதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு சார்ந்த தலைமை ஆசிரியர்களே முழு பொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவக்கப்படுகிறது.

இணைப்பு – முன்னுரிமை பட்டியல் மற்றும்
பார்வை செயல்முறை நகல்

ஓம்/–திரு க.முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்